ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி
# 2.1 – வானவர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 2.1 – வானவர்

‡ வானவர் தங்கள் சிந்தை போல ⋆
என் நெஞ்சமே ! இனிதுவந்து ⋆
மா தவ மானவர் தங்கள் சிந்தை ⋆
அமர்ந்துறைகின்ற எந்தை ⋆
கானவர் இடு கார் அகில் புகை ⋆
ஓங்கு வேங்கடம் மேவி ⋆
மாண் குறள் ஆன அந்தணற்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.1** ‖

உறவு சுற்றம் என்றொன்றிலா ⋆
ஒருவன் உகந்தவர் தம்மை ⋆
மண் மிசைப் பிறவியே கெடுப்பான் ⋆
அது கண்டென் நெஞ்சம் என்பாய் ⋆
குறவர் மாதர்களோடு ⋆
வண்டு குறிஞ்சி மருள் இசை பாடும் வேங்கடத்து ⋆
அறவ நாயகற்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.2** ‖

இண்டை ஆயின கொண்டு ⋆
தொண்டர்கள் ஏத்துவார் உறவோடும் ⋆
வானிடைக் கொண்டு போய் இடவும் ⋆
அது கண்டென் நெஞ்சம் என்பாய் ⋆
வண்டு வாழ் வட வேங்கட மலை ⋆

கோயில் கொண்டதனோடும் ⋆
மீமிசை அண்டம் ஆண்டிருப்பாற்கு ⋆
அடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.3** ‖

பாவியாது செய்தாய் என் நெஞ்சமே ! ⋆
பண்டு தொண்டு செய்தாரை ⋆
மண் மிசை மேவி ஆட்கொண்டு போய் ⋆
விசும்பேற வைக்கும் எந்தை ⋆
கோவி நாயகன் கொண்டல் உந்துயர் ⋆
வேங்கட மலை ஆண்டு ⋆
வானவர் ஆவியாய் இருப்பாற்கு ⋆
அடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.4** ‖

பொங்கு போதியும் பிண்டியும் உடைப் ⋆
புத்தர் நோன்பியர் பள்ளியுள் உறை ⋆
தங்கள் தேவரும் தாங்களுமே ஆக ⋆
என் நெஞ்சம் என்பாய் ⋆
எங்கும் வானவர் தானவர் நிறைந்தேத்தும் ⋆
வேங்கடம் மேவி நின்றருள் ⋆
அங்கண் நாயகற்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.5** ‖

துவரி ஆடையர் மட்டையர் ⋆
சமண் தொண்டர்கள் மண்டி உண்டு பின்னரும் ⋆
தமரும் தாங்களுமே தடிக்க ⋆
என் நெஞ்சம் என்பாய் ⋆
கவரி மாக் கணம் சேரும் ⋆
வேங்கடம் கோயில் கொண்ட கண் ஆர் விசும்பிடை ⋆

அமர நாயகற்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ॥ **2.1.6** ॥

தருக்கினால் சமண் செய்து ⋆
சோறு தண் தயிரினால் திரளை ⋆
மிடற்றிடை நெருக்குவார் அலக்கண் அது கண்டு ⋆
என் நெஞ்சம் என்பாய் ⋆
மருட்கள் வண்டுகள் பாடும் ⋆
வேங்கடம் கோயில் கொண்டதனோடும் ⋆
வானிடை அருக்கன் மேவி நிற்பாற்கு ⋆
அடிமைத் தொழில் பூண்டாயே ॥ **2.1.7** ॥

சேயன் அணியன் சிறியன் பெரியன் என்பதும் ⋆
சிலர் பேசக் கேட்டிருந்தே ⋆
என் நெஞ்சம் என்பாய் ! ⋆
எனக்கொன்று சொல்லாதே ⋆
வேய்கள் நின்று வெண் முத்தமே சொரி ⋆
வேங்கட மலை கோயில் மேவிய ⋆
ஆயர் நாயகற்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ॥ **2.1.8** ॥

கூடி ஆடி உரைத்ததே உரைத்தாய் ⋆
என் நெஞ்சம் என்பாய் ! துணிந்து கேள் ⋆
பாடி ஆடிப் பலரும் ⋆
பணிந்தேத்திக் காண்கிலார் ⋆
ஆடு தாமரையோனும் ஈசனும் ⋆
அமரர் கோனும் நின்றேத்தும் ⋆

வேங்கடத்தாடு கூத்தனுக்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.9** ‖

‡ மின்னு மா முகில் மேவு ⋆
தண் திருவேங்கட மலை கோயில் மேவிய ⋆
அன்னமாய் நிகழ்ந்த ⋆
அமரர் பெருமானை ⋆
கன்னி மா மதிள் மங்கையர் கலிகன்றி ⋆
இன் தமிழால் உரைத்த ⋆
இம் மன்னு பாடல் வல்லார்க்கு ⋆
இடம் ஆகும் வான் உலகே ‖ **2.1.10** ‖

அடிவரவு — வானவர் உறவு இண்டை பாவியாது பொங்கு துவரி தருக்கினால் சேயன் கூடி மின்னு காசையாடை

வானவர் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்